# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 10.09.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று ரமலானின் கடைசி ஜுமுஆ ஆகும். மேலும் இன்று கடைசி நோன்பாகும். அல்லாஹ் இந்த ரமலானை நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் அருள்மழைகளை பொழியச் செய்கின்றதாக ஆக்குவானாக! மேலும் ஜமாஅத்தின் முன்னேற்றங்களுக்கு திருப்புமுனையாக ஆக்குவானாக! நாம் நமக்காகவும், நம்முடைய மனைவி மக்களுக்காகவும், நம்முடைய குடும்பத்தினருக்காகவும் செய்த துஆக்களை ஒப்புக்கொண்டு அதன் சிறந்த முடிவுகளை வெளிப்படுத்துவானாக! மேலும் நாம் நமது ஜமாஅத்தின் முன்னேற்றங்களுக்காக செய்த துஆக்களையும் ஒப்புக் கொள்வானாக! அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு அன்னாரின் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான வாக்குறுதி அளித்துள்ளான். மேலும் இந்த முன்னேற்றங்கள் நிச்சயிக்கப்பட்டதாகும். நம்முடைய துஆக்கள் என்பது அந்த (வாக்களிக்கப்பட்ட) வெற்றிகள் மற்றும் முன்னேற்றங்களுக்காக முயற்சி செய்யக் கூடியவர்களுக்கு அல்லாஹ் வைத்துள்ள நற்கூலியில் நம்மை பங்குதாரர்களாக ஆக்குவதற்காகவே ஆகும். மேலும் அந்த முன்னேற்றங்களுக்காக எளிய முயற்சிகளை செய்து அதன் பரக்கத்துகளிலிருந்து பலன்பெறுவதற்காக ஆகும். ஏனென்றால் நானும் எனது தூதரும் வெற்றி பெறுவோம் என்று அல்லாஹ் தனது தீர்ப்பை ஏற்கனவே அறிவித்துள்ளான்.

அல்லாஹ் நம்முடைய வாழ்நாளிலேயே அந்த வெற்றிகளைக் காட்டித் தந்து நம்மை அதில் பங்குதாரர்களாக ஆக்கி விட்டால் அது அல்லாஹ்வின் கருணையாகும். அவ்வாறில்லையென்றால் அவனுக்கு நம்முடைய துஆவிற்கு என்ன அவசியம் உள்ளது? அவனுக்கு நம்முடைய முயற்சிகளுக்கு தான் என்ன அவசியமுள்ளது? எனவே நாம், அல்லாஹ் எப்பொழுதும் நம்மீது தனது அருள் மற்றும் கருணையின் பார்வையை வீசிக் கொண்டிருக்க வேண்டும் என்றும், மேலும் நாம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்ற மக்களாகவும், அவனுடைய அருளைப் பெற்ற மக்களாகவும் ஆகிவிட வேண்டும் என்று எப்பொழுதும் துஆ செய்து கொண்டிருக்க வேண்டும்.

நான் திருக்குர்ஆனிலிருந்தும், நபிமொழிகளிலிருந்தும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இறை அறிவிப்புகள் மற்றும் மேற்கோள்களிலிருந்தும் பல்வேறு வகையான துஆக்களை இன்றைய குத்பாவில் எடுத்து வைக்க தேர்ந்தெடுத்துள்ளேன். திருக்குர்ஆனிலுள்ள சில துஆக்களின் விளக்கமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தந்த விளக்கத்தையும் அன்னாரின் வார்த்தைகளிலேயே நான் எடுத்து வைப்பேன். நான் துஆக்களை படித்துக் கொண்டு செல்வேன். நீங்களும் என்னுடன் சேர்ந்து அந்த துஆக்களை படியுங்கள்; ஆமீன் என்று கூறிக்கொண்டு செல்லுங்கள். குத்பாவிற்குப் பிறகும், ஜுமுஆவிற்குப் பிறகும் இந்த (ரமலானின்) கடைசி நோன்பினை இந்த அருளுக்குரிய கடைசி நாளின் எஞ்சிய சில மணி நேரங்களை துஆவில் கழிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். நான் தனிநபர் சீர்திருத்தம் மற்றும் மற்றும் அருளுக்குத் தேவையான துஆக்களை தேர்ந்தெடுத்துள்ளேன். பெரும்பாலும் ஜமாஅத்தின் முன்னேற்றம் மற்றும் வெற்றிகளுக்கான துஆக்களை தேர்ந்தெடுத்துள்ளேன்.

**துஆ - 1 : திருக்குர்ஆன் அதிகாரம் 46, வசனம் 16.**

**என் இறைவா! நீ எனக்கும் என் பெற்றோருக்கும் அருளிய உனது அருளுக்கு நான் நன்றி செலுத்தவும், உனக்கு விருப்பமான நற்செயல்களை நான் செய்யவும் நீ எனக்கு அருள்புரிவாயாக! மேலும் எனக்காக என் சந்ததிகளை நல்லவர்களாக ஆக்குவாயாக! நிச்சயமாக நான் உன்னிடமே திரும்புகிறேன். நிச்சயமாக நான் (உனக்கு) கீழ்படிந்து நடப்பவர்களைச் சேர்ந்தவனாவேன். (ஆமீன்)**

**துஆ - 2 :** (மேற்கண்ட) இதே துஆ **திருக்குர்ஆன் அதிகாரம் நமல், வசனம் 20** -ல் இதே வார்த்தைகளில் வருகிறது.

**என் இறைவா! நீ எனக்கும் என் பெற்றோருக்கும் செய்த உன் அருட்கொடைக்கு நான் நன்றி செலுத்துவதற்கும், நீ திருப்தி அடையக் கூடிய பொருத்தமான செயலைச் செய்வதற்கும் நீ எனக்கு வாய்ப்பளித்து உன் கருணையால் என்னை நீ உனது நல்லடியார்களுள் சேர்ப்பாயாக! (47:20) (ஆமீன்)**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் தனது பெற்றோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளும்படி கட்டளையிடப்பட்டுள்ளான். அதற்கு என்ன காரணம் என்றால், மனிதனை அவனது தாய் மிகுந்த கஷ்டத்துடன் தனது வயிற்றில் வைத்திருந்தாள். மிக கஷ்டத்துடன் அவனை பெற்றெடுத்தாள். மிக நீண்ட காலம் வரை அவள் இந்த கடினத்திற்கு ஆளாகின்றாள். எந்த அளவுக்கென்றால் ஒரு நல்லடியார் இவ்வாறு துஆ செய்கின்றார்.

என் இறைவா! நீ எனக்கும் என் பெற்றோருக்கும் அருளிய உனது அருட்கொடைகளுக்கு நான் நன்றி செலுத்தவும், உனக்கு விருப்பமான நற்செயல்களை நான் செய்யவும் நீ எனக்கு அருள்புரிவாயாக! மேலும் எனக்காக என் சந்ததிகளை நல்லவர்களாக ஆக்குவாயாக! நான் எனது பிள்ளைகள் மீது நம்பிக்கை வைக்கவில்லை. மாறாக, ஒவ்வொரு தேவையின்போதும் நான் உன் பக்கமே முகம் திருப்புகிறேன். வேறு எவருக்கு முன்பாகவும் சிரம் பணியாமல் உன் பக்கம் சிரம் பணியக்கூடியவர்களை நான் சேர்ந்தவனாவேன்.

**துஆ - 3 : திருக்குர்ஆனில் மற்றோரிடத்தில் அல்லாஹ் இந்த துஆவினை கற்றுத் தந்துள்ளான்.**

**எங்கள் இறைவா! எங்கள் மனைவிமார்களையும், எங்கள் குழந்தைகளையும், எங்கள் கண்களுக்கு குளிர்ச்சி அளிக்கக்கூடியவர்களாக ஆக்குவாயாக! மேலும் எங்களை இறையச்சமுடையவர்களுக்கு முதன்மை ஆனவராக ஆக்குவாயாக! (25:75) (ஆமீன்)**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவ்வாறு துஆ செய்பவர்கள் தான் நம்பிக்கையாளர்கள் ஆவர். எங்கள் இறைவா! எங்கள் மனைவி மற்றும் பிள்ளைகள் தொடர்பாக எங்களின் உள்ளங்களுக்கு மனைநிறைவினை வழங்குவாயாக! எங்கள் மனைவி மற்றும் பிள்ளைகளை நல்லடியார்களாக ஆக்குவாயாக! மேலும் அவர்களுக்கு எங்களை முன்மாதிரியாக ஆக்குவாயாக! ஆமீன்.

எனவே, இவ்விஷயங்கள் மூலமாக குடும்பமும் அல்லாஹ்வின் அருளினை ஈர்க்கக்கூடியதாக ஆகின்றது. மேலும் அதன் உறுப்பினர்களும் ஜமாஅத்தின் நன்கு செயல்படக்கூடியவர்களாக மாறி தலைமுறை தலைமுறையாக ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் பங்கு வகித்துச் செல்கின்றனர்.

**துஆ - 4 : அல்லாஹ் மற்றோரிடத்தில் துஆ ஒன்றினைக் கற்றுத் தருகின்றான்:**

**எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக! மறுமையிலும் வெற்றியினை வழங்குவாயாக! மேலும் எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக! (2:202) (ஆமீன்)**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒரு நம்பிக்கையாளரின் உலகத்துடனான தொடர்பு எந்த அளவுக்கு அவருடைய உயர் படித்தரங்களுக்கு காரணமாக அமைகின்றன. ஏனென்றால் அவருடைய நோக்கம் மார்க்கமாக உள்ளது. மேலும் அவர் மார்க்கத்தின் தொண்டராகத் திகழ்வார். உலகத்தைப் பெறுவது உங்களது நோக்கமாக இருக்கக் கூடாது. மாறாக உலகத்தை சம்பாதிப்பதன் அசல் நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டும். மார்க்கத்தின் தொண்டனாக இருக்கும் வகையில் உலகத்தை சம்பாதிக்க வேண்டும். ஒரு மனிதன் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்தை அடைவதற்கு பயணத்திற்கு தேவையான வாகனங்கள் மற்றும் பொருள்களை தன்னுடன் எடுத்துக் கொள்கிறான் என்றால் அதன் நோக்கம் இலக்கை அடைய வேண்டும் என்பதே தவிர வாகனங்கள் மற்றும் பிற பொருள்களைப் பெறுவது அம்மனிதனின் நோக்கமாக இருப்பதில்லை. அதேபோன்று தான் மனிதன் மார்க்கத் தொண்டனாகத் திகழ வேண்டும் என்ற வகையில் உலகத்தை சம்பாதிக்க வேண்டும்.

அல்லாஹ் கற்றுத் தந்துள்ள ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா... என்ற துஆவில் உலகத்திற்கு முன்னுரிமை வழங்கியுள்ளான். ஆனால் எந்த உலகத்திற்கு? எந்த உலகம் மற்றும் மறுமையின் வெற்றிகளுக்கு காரணமாக அமையுமோ அந்த உலகத்திற்கு இறைவன் துஆவில் முதன்மை வழங்கியுள்ளான். இந்த துஆவின் போதனையிலிருந்து நம்பிக்கையாளர் மறுமையின் வெற்றியினைக் கருத்தில் கொண்டு உலகத்தை சம்பாதிக்க வேண்டும்.

மேலும் ஹஸனத்துத் துன்யா என்ற சொல்லில் உலகத்தை சம்பாதிக்க ஒரு முஃமின் மேற்கொள்ள வேண்டிய எல்லா சிறந்த வழிமுறைகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. உலகத்தை சம்பாதிப்பதற்கு எந்த வழிமுறையினை மேற்கொண்டால் நன்மையாகவும், சிறப்பாகவும் அமையுமோ அதனை மேற்கொள்ள வேண்டுமே தவிர சக மனித இனத்திற்கு துன்பத்தை வழங்குகின்ற வழிமுறையினை மேற்கொள்ளக் கூடாது.

உண்மையில் மனிதனை மறுமையின் செல்வங்களுக்கு வாரிசாக்குகின்ற உலக செல்வங்கள்தான் ஹஸனத்துத் துன்யா (உலக வெற்றிகள்) ஆகும். அதில் அல்லாஹ்விற்குரிய உரிமைகளை வழங்குவதும் அடங்கும். அடியாருக்குரிய உரிமைகளை வழங்குவதும் அடங்கும்.

அடுத்து அல்லாஹ் நமக்கு ஒரு துஆவினை கற்றுத் தந்துள்ளான்!

**துஆ - 5 : அதிகாரம் அல்அஹ்ராஃப், வசனம் 152**

**என் இறைவா! என்னையும், என் சகோதரரையும் மன்னித்து விடுவாயாக! எங்கள் இருவரையும் உன் கருணையில் நுழையச் செய்வாயாக! கருணை காட்டுவோர் எல்லாரையும் விட நீ மிக்க கருணை காட்டுபவனாவாய். (7:152) (ஆமீன்)**

**துஆ - 6 : அதிகாரம் ஆலி இம்ரான், வசனம் 148**

**எங்கள் இறைவா! எங்கள் குற்றங்களையும், எங்கள் செயல்களில் எங்களின் வரம்புமீறல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக! எங்கள் காலடிகளை உறுதிப்படுத்துவாயாக! மேலும் நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக! (3:148) (ஆமீன்)**

**துஆ - 7 : அதிகாரம் அல் அஃராஃப், வசனம் 156**

**நீ எங்கள் உதவியாளனாக இருக்கிறாய். எனவே எங்களை மன்னித்து எங்களுக்கு கருணை காட்டுவாயாக! மன்னிப்பவர்களுள் எல்லாரையும் விட நீ சிறந்தவனாவாய். (ஆமீன்)**

**துஆ - 8 : அதிகாரம் அல் அஃராஃப், வசனம் 157**

**நீ எங்களுக்கு இவ்வுலகிலும் மறுமையிலும் நன்மையினை எழுதுவாயாக! நாங்கள் உன்னிடமே தவ்பா செய்து வந்து விட்டோம். (ஆமீன்)**

**துஆ - 9 : அதிகாரம் 14, வசனம் 41, 42**

**என் இறைவா! என்னையும், என் சந்ததிகளையும் தொழுகையினை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றுபவர்களாக்கி வைப்பாயாக! எங்கள் இறைவா! என் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக! (ஆமீன்)**

**எங்கள் இறைவா! கேள்வி கணக்கு நிகழும் நாளில் எனக்கும், என் பெற்றோருக்கும், நம்பிக்கை கொண்டவர்கள் எல்லாருக்கும் நீ மன்னிப்பை வழங்குவாயாக! (ஆமீன்)**

**துஆ - 10 : அதிகாரம் 25, வசனம் 66**

**எங்கள் இறைவா! எங்களிடமிருந்து நரகத் தண்டனையை அகற்றி விடுவாயாக! ஏனெனில் அதன் தண்டனை ஒரு பெரும் வேதனையாகும். (ஆமீன்)**

**நிச்சயமாக அது தற்காலிகமாகத் தங்குவதற்கும் நிரந்தரமாகத் தங்குவதற்கும் கெட்ட இடமாகும். (ஆமீன்)**

**துஆ - 11 : அதிகாரம் 23, வசனம் 119**

**என் இறைவா! மன்னித்தருள்வாயாக! நிச்சயமாக கருணை காட்டுபவர்களில் நீ சிறந்தவனாவாய். (ஆமீன்)**

**துஆ - 12 : அதிகாரம் 23, வசனம் 110**

**எங்கள் இறைவா! நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவே நீ எங்களை மன்னித்து கருணை காட்டுவாயாக! மேலும் நீ கருணை காட்டுபவர்களுள் சிறந்தவனாவாய். (ஆமீன்)**

**துஆ - 13 : அதிகாரம் 26, வசனம் 170**

**என் இறைவா! என்னையும் என் குடும்பத்தினரையும் அவர்களது செயல்களிலிருந்து காப்பாயாக! (ஆமீன்)**

**துஆ - 14 : அதிகாரம் அத்தஹ்ரீம், வசனம் 12**

**என் இறைவா! உன்னிடத்திலே தோட்டத்தில் நீ எனக்காக ஒரு வீட்டைக் கட்டுவாயாக! ஃபிர்அவ்னிடமிருந்து அவனது செயலிலிருந்தும் என்னை காப்பாற்றுவாயாக! அநீதியிழைக்கும் சமுதாயத்திலிருந்தும் என்னை காப்பாற்றுவாயாக! (ஆமீன்)**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த துஆவிற்கு இவ்வாறு விளக்கமளிக்கின்றார்கள்:**

திருக்குர்ஆனில் அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு எடுத்துக்காட்டாக இரண்டு நபர்களை கூறுகின்றான். ஒன்று, ஃபிர்அவ்னின் மனைவி. அதாவது இதுபோன்ற (அநீதியிழைக்கும்) கணவனிடமிருந்து பாதுகாப்புத் தேடும் பெண். இது மன இச்சைகளுக்கு ஆளாகி வருகின்ற நம்பிக்கையாளர்களுக்கு உதாரணமாகும். மன இச்சைகள் ஃபிர்அவ்னைப் போன்று நன்மையிலிருந்து மனிதனை தடுத்து நிறுத்தக் கூடியதாகும். குற்றமிழைக்கின்றனர்; பின்னர் உணர்ந்து தவ்பா செய்கின்றனர். இறைவனிடத்தில் பாதுகாப்புத் தேடுகின்றனர். அவர்களுடைய நஃப்ஸ் ஃபிர்அவ்ன் என்ற கணவனாக அவர்களை தொந்தரவு செய்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட மக்கள் நஃப்ஸே லவ்வாமா (குற்றம் சாட்டும் ஆன்மா) என்ற நிலையில் உள்ளார்கள். தீமையிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதில் எப்பொழுதும் எச்சரிக்கையாக இருப்பார்கள்.

இரண்டாவது வகைப்பட்ட நம்பிக்கையாளர்கள் யாரென்றால் அவர்கள் முதல் வகையானவர்களை விட உயர்நிலை பெற்றவர்கள் ஆவர். அவர்கள் தீமைகளிலிருந்து தப்பிப்பது மட்டுமல்ல. நன்மைகளையும் செய்கின்றார்கள். இவர்களுக்கான எடுத்துக்காட்டாக அல்லாஹ் ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்களைக் குறிப்பிடுகின்றான். அவள் தனது கற்புடைமையைக் காப்பாற்றிக் கொண்டாள். எனவே நாம் அவளுக்கு எமது வசனத்தை வழங்கினோம். (66:13)

இறையச்சத்திலும் தூய்மையிலும் சிறந்து விளங்குபவர் மர்யமைப் போன்றவராவார். அல்லாஹ் அவர் இப்னு மர்யமாக ஆகும்படியாக தனது ரூஹை ஊதுகின்றான். இப்படிப்பட்ட நன்மைகளை செய்யக்கூடிய நம்பிக்கையாளர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! மேலும் இந்த ரமலானில் நன்மைகளை மேற்கொள்ள நாம் செய்த முயற்சிகளில் நாம் நிலையானவர்களாக இருப்போமாக! இறையச்சத்திலும், தூய்மையிலும் நமது காலடிகள் ஒவ்வொரு நொடிப்பொழுதும் முன்னேறிக் கொண்டே செல்லட்டுமாக! மேலும் அல்லாஹ் அநீதியான சமுதாயம் மற்றும் அரசாங்கத்திடமிருந்து நம்மை பாதுகாப்பானாக! அதிகாரத்தின் போதையில் அஹ்மதிகள் மீது அநீதியிழைத்துக் கொண்டிருக்கும் ஃபிர்அவ்ன்களிடமிருந்தும் அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! மேலும் அல்லாஹ் அவர்களை பிடிப்பானாக! (ஆமீன்)

**துஆ - 14 : சூரா கமர், வசனம் 11 -ல் வருகிறது.**

**நான் தோற்கடிக்கப்பட்டுள்ளேன். எனவே நீ எனக்கு உதவி செய்வாயாக! (ஆமீன்)**

**துஆ - 15 :**

**என் இறைவா! அநீதியிழைக்கக்கூடிய சமுதாயத்திடமிருந்து என்னை பாதுகாப்பாயாக!**

**துஆ - 16 : சூரா 26, வசனங்கள் 118,119**

**என் இறைவா! என் சமுதாயத்தினர் என்னைப் பொய்யாக்கி விட்டனர். எனவே நீ எனக்கும் அவர்களுக்குமிடையில் இறுதியான தீர்ப்பு வழங்கி என்னையும், என்னுடனுள்ள நம்பிக்கை கொண்டவர்களையும் காப்பாற்றுவாயாக! (ஆமீன்)**

நபிமார்கள் மற்றும் அவர்களின் ஜமாஅத்தின் ஆயுதம் துஆவே ஆகும். இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்முடைய வெற்றிகள், முன்னேற்றங்கள் துஆவின் மூலமே என்பதனை தெளிவுபடுத்தி விட்டார்கள். எனவே இதை (துஆவைத்) தவிர்த்து ஆயுதங்கள் மூலமாகவோ அல்லது போராட்டங்கள் மூலமாகவோ அல்லது எவ்வகையிலோ வெற்றி கிடைக்காது. எனவே தொடர்ந்து துஆ செய்வதில் நிலைநிற்க வேண்டும். இதுதான் நம்முடைய கடமை மற்றும் இதுவே நம்முடைய வெற்றிக்கான உத்திரவாதம் ஆகும்.

அடுத்து அல்லாஹ் துஆ ஒன்றினைக் கற்றுத் தருகிறான்.

**துஆ - 17 : அதிகாரம் 23, வசனங்கள் 98, 99**

**என் இறைவா! கிளர்ச்சியாளர்களின் தீங்கிலிருந்து நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். மேலும் என் இறைவா! அவர்கள் என் முன் வருவதிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். (ஆமீன்)**

**துஆ - 18 :**

**மேலும் எங்கள் இறைவா! எங்களுக்கு சகிப்புத்தன்மையை தந்தருள்வாயாக! மேலும் முழுமையாக கட்டுப்பட்ட நிலையில் மரணிக்கச் செய்வாயாக! (ஆமீன்)**

எங்கள் இறைவா! இந்த துன்பமான தருணத்தில் பொறுமை செய்கின்ற வகையில் எங்கள் உள்ளத்திற்கு அமைதியை தந்தருள்வாயாக! இஸ்லாத்திலேயே எங்களை மரணிக்கச் செய்வாயாக! நினைவில் கொள்ளுங்கள். துன்பம் மற்றும் சோதனைகளின் போது அல்லாஹ் தன்னுடைய அடியார்களின் உள்ளங்களில் ஓர் ஒளியினை இறக்குகின்றான். அதன் மூலமாக ஆற்றல் பெற்று மனநிறைவுடன் துன்பங்களை எதிர்கொள்வார்கள். மேலும் ஈமானின் சுவை பெற்று அவர்களின் கால்களில் கட்டப்பட்டுள்ள சங்கிலிகளுக்கு முத்தம் கொடுப்பார்கள்.

**துஆ - 19 : அதிகாரம் 7, வசனம் 24**

**எங்கள் இறைவா! நாங்கள் எங்களுக்கே அநீதியிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு கருணை காட்டாவிட்டால் நாங்கள் நஷ்டம் அடைந்தவர்களைச் சேர்ந்தவர்களாகி விடுவோம். (ஆமீன்)**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவ்வாறு துவக்கத்தில் துஆவின் மூலமாக ஆதமிடத்தில் ஷய்த்தானை தோல்வியுறச் செய்தானோ அதுபோன்று இந்த இறுதிக்காலத்தில் துஆவின் மூலமாக அல்லாஹ் நமக்கு வெற்றியையும், மேன்மையையும் வழங்குவதைத் தவிர வாளின் மூலமாக அல்ல என்பது நமது நம்பிக்கையாகும்.

எனவே நமது ஆயுதம் வாளல்ல! மாறாக துஆ ஆகும். எவ்வாறு முதல் ஆதமிற்கு மேற்கண்ட துஆவின் மூலமாக ஷய்த்தானிற்கு எதிராக வெற்றி கிடைத்ததோ அதே போன்றே இந்த இறுதிக் காலத்தில் ஷய்த்தானோடு இறுதிப்போர் செய்கின்ற இரண்டாவது ஆதமாகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் துஆவின் மூலமாகவே வெற்றி கிடைக்கும்.

**துஆ - 20 : அதிகாரம் 7, வசனம் 9**

**எங்கள் இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காட்டியதன் பின்னர், எங்கள் உள்ளங்களை கோணலாக்காதிருப்பாயாக! எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக! நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய். (ஆமீன்)**

**துஆ - 21 : அதிகாரம் 2, வசனம் 287**

**எங்கள் இறைவா! நாங்கள் மறந்து விட்டாலோ, தவறிழைத்தாலோ நீ எங்களை தண்டிக்காதிருப்பாயாக! எங்கள் இறைவா! எங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது நீ பாரத்தைச் சுமத்தியது போன்று எங்கள் மீதும் நீ பாரத்தை சுமத்தாதிருப்பாயாக! எங்கள் இறைவா! எங்களால் சுமக்க இயலாததை எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக! எங்களை மன்னிப்பாயாக! எங்களை பொறுத்தருள்வாயாக! எங்கள் மீது கருணை காட்டுவாயாக! நீயே எங்கள் எஜமானன். ஆகவே நிராகரிக்கும் கூட்டத்தினருக்கெதிராக நீ எங்களுக்கு உதவி புரிவாயாக! (ஆமீன்)**

**துஆ - 22 : அதிகாரம் 2, வசனம் 251**

**எங்கள் இறைவா! எங்களுக்கு சகிப்புத்தன்மையை வழங்குவாயாக! எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக! நிராகரிப்பாளர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக! (ஆமீன்)**

நம்முடைய இறைவன் நமது பாவங்களை மன்னிக்காதவன் என்றால் இதுபோன்ற துஆக்களைக் கற்றுத் தந்திருக்கமாட்டான் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**துஆ - 23, அதிகாரம் 7, வசனம் 48**

**எங்கள் இறைவா! எங்களை அநீதியிழைக்கும் சமுதாயத்தினரைச் சார்ந்தவர்களாக ஆக்கிவிடாதிருப்பாயாக! (ஆமீன்)**

**துஆ - 24 : அதிகாரம் 5, வசனங்கள் 84, 85**

**எங்கள் இறைவா! நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவே எங்களை சாட்சி கூறுபவர்களுடன் எழுதிக் கொள்வாயாக! (ஆமீன்)**

இனி நபிமொழிகளிலிருந்து நான் தேர்ந்தெடுத்துள்ள ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சில துஆக்களைப் பார்ப்போம்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆக்கள்

**ஹதீஸ் துஆ - 1 :**

அல்லாஹ்வே! நான் உன்னிடம் சோம்பல், முதுமை, பாவம், கல்லறையின் தண்டனை, நெருப்பின் குழப்பம் மற்றும் நெருப்பின் தண்டனையிலிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன். செல்வத்தின் சோதனையிலிருந்து என்னை நீ பாதுகாப்பாயாக! நான் உன்னிடத்தில் ஏழ்மையின் சோதனையிலிருந்தும் பாதுகாப்புத் தேடுகிறேன். மஸீஹே தஜ்ஜாலுடைய ஃபித்னாக்களிலிருந்தும் உன்னிடத்தில் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அல்லாஹ்வே! என்னுடைய பாவங்களை குளிர்ந்த நீரால் சுத்தப்படுத்துவாயாக! எவ்வாறு நீ வெந்நிற ஆடையை அழுக்குகளிலிருந்து சுத்தப்படுத்தி விடுகிறாரோ அதுபோன்று என்னுடைய உள்ளத்தை பாவங்களிலிருந்து தூய்மைப்படுத்தி விடுவாயாக! மேலும் நீ கிழக்கிற்கும், மேற்கிற்கும் தூரத்தை ஏற்படுத்தியது போன்று எனக்கும் என் பாவங்களுக்கும் இடையே தூரத்தை ஏற்படுத்துவாயாக!

**ஹதீஸ் துஆ - 2 :**

அல்லாஹ்வே! என் பாவங்களை மன்னிப்பாயாக! என்னுடைய வீட்டை எனக்காக விரிவுபடுத்துவாயாக! எனக்காக என் ரிஸ்கில் (உணவில்) பரக்கத்தை வழங்குவாயாக!

அல்லாஹ்வே! நான் இயலாமை, சோம்பல், கோழைத்தனம், சோர்வினை ஏற்படுத்தும் முதுமை ஆகியவற்றிலிருந்து உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். மேலும் கபரின் தண்டனையிலிருந்து நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். நான் வாழ்க்கை மற்றும் மரணத்தின் குழப்பங்களிலிருந்து உன்னிடத்தில் பாதுகாப்பு வேண்டுகிறேன்.

**ஹதீஸ் துஆ - 3**

அல்லாஹ்வே! நான் பணிவில்லாத உள்ளத்திடமிருந்தும், ஒப்புக் கொள்ளப்படாத துஆவிலிருந்தும் ஒருபோதும் நிறைவு பெறாத உள்ளத்திடமிருந்தும், பயன்தராத கல்வியிடமிருந்தும் உன்னிடத்தில் பாதுகாப்பு வேண்டுகிறேன். நான் இந்த நான்கு விஷயங்களிலிருந்தும் உன்னிடத்தில் பாதுகாப்பு வேண்டுகிறேன்.

**ஹதீஸ் துஆ - 4**

என் இறைவா! நான் என் ஆத்மாவிற்கு அதிகமாக அநீதியிழைத்து விட்டேன். உன்னைத் தவிர பாவங்களை மன்னிப்பவர் எவருமில்லை. நீ என்னை மன்னிப்பாயாக! என் மீது கருணை காட்டுவாயாக! இறைவா நீயே மன்னிக்கக் கூடியவன் மற்றும் மீண்டும் மீண்டும் கருணை காட்டக் கூடியவன் ஆவாய்.

**ஹதீஸ் துஆ - 5**

அல்லாஹ்வே! நீ என்னுடைய எல்லா பாவங்களையும் மன்னித்தருள்வாயாக! மேலும் என்னுடைய எல்லா விஷயங்களிலும் எனது கவனமின்மை, அறிவீனம் மற்றும் வரம்புமீறுதலின் தீங்கிலிருந்தும் என்னை காப்பாயாக! மேலும் நான் அறியாத, நீ அறிந்த எல்லா தீங்கிலிருந்தும் நஷ்டத்திலிருந்தும் என்னை நீ பாதுகாப்பாயாக!

**ஹதீஸ் துஆ - 6**

அல்லாஹ்வே! என்னுடைய எல்லா பாவங்களையும் மன்னித்தருள்வாயாக! நான் அறிந்தும் அறியாமலும் கிண்டலுக்காகவும் செய்த எல்லா பாவங்களையும் மன்னித்து விடுவாயாக! இவை அனைத்தும் என்னிடத்தில் உள்ளன. என்னிடமிருந்து இதுவரை வெளிப்பட்ட, வெளிப்படாத பாவம் மற்றும் மறைவாகவும் வெளிப்படையாகவும் நான் செய்த அனைத்து பாவங்களையும் மன்னித்தருள்வாயாக! நீயே முன் கொண்டு செல்பவனும், பின்னுக்கு தள்ளுபவனுமாவாய்.

**ஹதீஸ் துஆ - 7**

அல்லாஹ்வே! நான் என்னை உன்னிடத்தில் ஒப்படைக்கிறேன். உன் மீது நம்பிக்கை கொள்கிறேன். உன் மீது ஈமான் கொண்டுள்ளேன். உன் பக்கம் குனிகின்றேன். உன்னுடைய உதவியைக் கொண்டு எதிராளியிடம் விவாதிக்கின்றேன். உன்னிடத்திலேயே நான் எனது பிரச்சனையை ஒப்படைக்கிறேன். நீ என்னுடைய முன் பின் மற்றும் மறைவான, வெளிப்படையான அனைத்து பாவங்களையும் மன்னித்தருள்வாயாக! நீயே ஆதியும் அந்தமும் ஆவாய். உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறெவருமில்லை.

**ஹதீஸ் துஆ - 8**

அல்லாஹ்வே! எனது உள்ளத்திற்கு ஒளியை வழங்குவாயாக! எனது செவியிலும் ஒளி வழங்குவாயாக! எனது வலமும், இடமும், முன்பும், பின்பும், மேலும், கீழும் ஒளியை வழங்குவாயாக! என்னை ஒளிமயமாக ஆக்குவாயாக! (ஆமீன்)

**ஹதீஸ் துஆ - 9**

அல்லாஹ்வே! நான் உன்னிடத்தில் உனது அன்பையம், உனது நேசர்களின் அன்பையும், உனது அன்பை எனக்கு பெற்றுத் தரும் செயல்களையும் வேண்டுகிறேன்.

அல்லாஹ்வே! எனது உயிர், எனது குடும்பம் மற்றும் குளிர்ந்த நீரை விட உன் மீதான அன்பை என் உள்ளத்தில் மேலானதாக ஆக்குவாயாக! (ஆமீன்)

**ஹதீஸ் துஆ - 10**

உள்ளங்களை மாற்றக்கூடியவனே! என் உள்ளத்தை உனது கீழ்படிதலில் நிலைநிறுத்துவாயாக! (ஆமீன்)

இனி, நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில துஆக்களின் பக்கம் வருகின்றேன். நான் எடுத்து வைத்துள்ள அனைத்து துஆக்களையும் செய்யக்கூடிய பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு தந்தருள்வானாக! (ஆமீன்)

## ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆக்கள்

**துஆ - 1 : (இல்ஹாமிய துஆ)**

**ரப்பி குல்லி ஷய்யின் காதிமுக ரப்பி ஃபஹ்ஃபழ்னீ வன்ஸுர்னீ வர்ஹம்னீ** – என் இறைவா! எல்லா விஷயங்களும் உனது கட்டுப்பாட்டில்தான் உள்ளது. என் இறைவா! என்னை பாதுகாப்பாயாக! மேலும் எனக்கு உதவி செய்வாயாக! மேலும் என் மீது கருணை காட்டுவாயாக! (ஆமீன்)

**துஆ - 2 :**

ஆற்றல் வாய்ந்த என் இறைவா! எனது அன்பிற்குரிய வழிகாட்டியே! எந்த வழியின் மூலமாக உண்மையாளர்கள் உன்னை அடைகின்றார்களோ அந்த வழியினை எனக்கு காட்டுவாயாக! எந்த வழி ஆபாசம் அல்லது பகைமை மற்றும் வெறுப்பு வழிகளாக அல்லது உலக ஆசைகளைக் கொண்டதாக உள்ளதோ அந்த வழிகளிலிருந்து என்னைப் பாதுகாப்பாயாக! நான் பாவம் செய்தவனாவேன். மேலும் பலவீனமானவனாவேன். உனது உதவியும், அருளும் இன்றி ஒன்றும் இயலாது. நீ கருணை காட்டுவாயாக! நீ என்னை பாவங்களிலிருந்து தூய்மையாக்குவாயாக! ஏனென்றால் உனது அருளும், கருணையுமின்றி வேறெதுவும் என்னை தூய்மைப்படுத்த இயலாது.

**துஆ - 3**

அன்பிற்குரியவர்களில் எல்லாவற்றையும் விட அன்பிற்குரியவனே! என் பாவங்களை எனக்கு மன்னித்தருள்வாயாக! என்னை உனது நல்லடியார்களில் சேர்த்தருள்வாயாக! (ஆமீன்)

**துஆ - 4**

தொழுகையில் முழுமையாக கவனத்தை செலுத்த என்ன வழிமுறை? என்று ஒருவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கேட்டார். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த துஆவை எழுதி அனுப்பி வைத்துள்ளார்கள்.

ஆற்றலும் கண்ணியமிக்க இறைவா! நான் பாவம் செய்தவனாவேன். மேலும் பாவத்தின் விஷயம் எனது உள்ளத்திலும, நாடி நரம்புகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதால் எனக்கு உருக்கமும் தொழுகையில் கவனமும் ஏற்படுவதில்லை. நீ உனது அருள் மற்றும் கருணையினால் என் பாவங்களை மன்னித்தருள்வாயாக! மேலும் என் குற்றங்களை மன்னித்தருள்வாயாக! எனது கடின உள்ளம் நீங்கி தொழுகையில் கவனம் ஏற்படும் விதமாக என் உள்ளத்தை மென்மையாக்குவாயாக! மேலும் என் உள்ளத்தில் உன் மகத்துவத்தையும் உனது அச்சத்தையும் உனது அன்பையும் ஏற்படுத்துவாயாக!

**துஆ - 5**

என் இறைவா! நீ என் மீது கருணை செய்வாயாக! நிச்சயமாக உனது அருளும் கருணையும் தண்டனையிலிருந்து பாதுகாக்கின்றன.

**துஆ - 6**

என் இறைவா! நீ எவ்வாறு உயிரற்றவைகளை உயிர்ப்பிக்கின்றாய் என்பதனை காட்டுவாயாக! மேலும் வானத்திலிருந்து மன்னிப்பையும், கருணையையும் இறக்குவாயாக!

**துஆ - 7**

என் இறைவா! உண்மையாளரையும், பொய்யரையும் வேறுபடுத்திக் காட்டுவாயாக! உண்மையாளர் மற்றும் சீர்திருத்தவாதி யார்? என்பதனை நீ அறிவாய்.

**துஆ - 8**

என் இறைவா! நீ உனது எல்லா ஒளியையும் எனக்கு காட்டுவாயாக!

**துஆ - 9**

என் இறைவா! நீ பூமியில் நிராகரிப்பாளர் எவரையும் விட்டு வைக்காதே!

**துஆ - 10**

என் இறைவா! நீ என்னை பாதுகாப்பாயாக! ஏனென்றால் சமுதாயம் என்னை ஏளனத்திற்குள்ளாகி விட்டது.

**துஆ - 11**

என் இறைவா! மன்னிப்பாயாக! மேலும் வானத்திலிருந்து கருணை செய்வாயாக! என்னை தனித்தவனாக விட்டு விடாதே! நீயே சிறந்த வாரிசாவாய். என் இறைவா! எமக்கும் எமது சமுதாயத்திற்கும் இடையில் இறுதியாக தீர்ப்பை வழங்குவாயாக!

**துஆ - 12**

பெரும்பாலான மனிதர்களின் உள்ளங்களை என் பக்கம் திருப்பி விடுவாயாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த இல்ஹாமிய துஆ ஜமாஅத்தின் முன்னேற்றம் தொடர்பாக வழங்கப்பட்ட நற்செய்தி ஆகும் என கூறியுள்ளார்கள்.

**துஆ - 13**

எங்கள் இறைவா! எங்களையும் எங்களுக்கு முன்னர் நம்பிக்கை கொண்ட எங்கள் சகோதரர்களையும் மன்னித்தருள்வாயாக! மேலும் உனது அன்பிற்குரிய நபி ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய சந்ததியினர்மீது ரஹ்மத் செய்வாயாக! மேலும் அன்னாரின் சமுதாயத்தை சார்ந்தவர்களாக எங்களை மரணிக்கச் செய்வாயாக! மேலும் எங்கள் இறைவா! நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். எங்களை நம்பிக்கையாளர்களாக எழுதுவாயாக!

**துஆ - 14**

என் இறைவா! எனக்கு நெருப்பின் மீது மேன்மையை வழங்குவாயாக! நாங்கள் உன்னுடைய பாவம் செய்த அடியார்களாவோம். நஃப்ஸ் மேலோங்கி விடுகின்றது. நீ எங்களை மன்னிப்பாயாக! உலகம் மற்றும் மறுமையின் ஆபத்துகளிலிருந்து நீ என்னை பாதுகாப்பாயாக!

**துஆ - 15**

எல்லா உலகங்களையும் படைத்துப் பரிபாலிக்கின்ற இறைவா! உன்னுடைய கருணைகளுக்கு என்னால் நன்றி கூறி முடியாது. நீ மிகவும் கருணையாளனும் கண்ணியத்திற்குரியவனுமாவாய். மேலும்

உன்னுடைய எண்ணற்ற கருணைகள் என் மீது உள்ளன. நான் அழிந்துவிடாமல் இருக்க என்னுடைய பாவங்களை மன்னித்தருள்வாயாக! நான் ஜீவிதம் பெற உனது அன்பினை என் உள்ளத்தில் ஏற்படுத்துவாயாக! என் குறைகளை திரையிடுவாயாக! நீ என் மீது திருப்தி கொள்ளும் செயல்களை என்னை செய்ய வைப்பாயாக! உன் கோபம் என் மீது இறங்குவதிலிருந்து உன்னுடைய கண்ணியத்தைக் கொண்டு பாதுகாப்புத் தேடுகிறேன். கருணை செய்வாயாக! இம்மை மற்றும் மறுமையின் ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பாயாக! எல்லா அருளும் கருணையும் உன்னுடைய கைகளிலேயே உள்ளது. ஆமீன் ஸும்ம ஆமீன்.

**துஆ - 16**

எங்கள் இறைவா! எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக! நாங்கள் பாவம் செய்து விட்டோம்.

**துஆ - 17**

எங்களின் கண்ணியமிக்க இறைவா! எங்களின் கஷ்டங்களை நீக்குவாயாக! மேலும் துன்பங்களையும் நீக்குவாயாக! மேலும் எங்களுடைய உள்ளத்தை எல்லா வகையான துன்பங்களிலிருந்தும் பாதுகாப்பாயாக! எங்களுடைய துன்பங்களில் உதவியாளனாக இருப்பாயாக! நாங்கள் எங்கிருந்தாலும் எங்களுடன் இருப்பாயாக! எங்களுடைய குறைகளை மறைப்பாயாக! ஆபத்துகளிலிருந்து எங்களை பாதுகாப்பாயாக! நாங்கள் உன் மீதே தவக்குல் வைத்துள்ளோம். எங்களது விஷயங்களை உம்மிடம் ஒப்படைத்து விட்டோம். இம்மையிலும் மறுமையிலும் நீயே எங்களது எஜமானனாவாய். நீ கருணை செய்பவர்களில் மிகவும் சிறந்தவனாவாய். எனவே அகில உலகங்களின் இறைவா! ஒப்புக் கொள்வாயாக!

**துஆ - 18**

ஆற்றலும் அதிகாரமும் வாய்ந்த இறைவா! நீ குழந்தைகளுக்கும், பாமர மக்களுக்கும் அறிவை வழங்குவாயாக! மேலும் உலகியல் அறிஞர்கள் மற்றும் தத்துவ ஞானிகளின் கண்கள் மற்றும் உள்ளங்களில் திரையிட்டு விடுகின்றாய். இதுவே தொன்றுதொட்டு வரும் உனது நடைமுறையாகும். ஆனால் நான் உன்னிடத்தில் மிக உருக்கம் மற்றும் பணிவுடன் வேண்டுகிறேன். அவர்களிலிருந்தும் ஒரு கூட்டத்தை எம் பக்கம் கொண்டு வருவாயாக! நீ அவ்வாறு சிலரை எனக்கு தந்துள்ளாய். அவர்கள் காண்பதற்கும், கேட்பதற்கும், புரிந்து கொள்வதற்கு ஏதுவாக முறையே கண், காது மற்றும் இதயத்தை அவர்களுக்கு வழங்குவாயாக! மேலும் நீ என் மீது இறக்கியுள்ள அருளை கண்டு கொண்டு அதனைப் பெறுவதன் பக்கம் அவர்களின் கவனத்தை திருப்புவாயாக! நீ விரும்பினால் அவ்வாறு செய்ய இயலும். ஏனென்றால் உன்னால் இயலாதது எதுவுமில்லை.

**துஆ - 19**

என் இறைவா! உனது அடியாருக்கு உதவி செய்வாயாக! மேலும் உனது பகைவர்களை இழிவுபடுத்துவாயாக! என் இறைவா! எனது துஆவினை கேட்பாயாக! மேலும் அதனை ஏற்றுக் கொள்வாயாக! எதுவரை தான் உன்னோடும், உனது தூதரோடும் எள்ளி நகையாடப்படும்? எதுவரை இந்த மக்கள் உனது வேதத்தை பொய்ப்படுத்தி உனது நபிக்கெதிராக தீய பேச்சுகளை பேசி வருவார்கள். எப்பொழுதும் நிலைபெற்றிருக்கும் இறைவா! உன்னுடைய கருணையைக் கொண்டு உன்னிடத்தில் நான் முறையிடுகிறேன்.

**துஆ - 20**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது ஜமாஅத்திற்காகவும் காதியானிற்காகவும் துஆ செய்து கொண்டிருந்த போது இந்த இல்ஹாம் இறங்கியது. 'அவர்களை தூள் தூளாக்குவாயாக!' அப்போது இந்த துஆ எனக்கு ஏன் கூறப்பட்டது என்ற சிந்தனை எழுந்தது. அப்போது ஒரு ஆண்டு காலமாக பைத்துத் துஆவில் எழுதி வைக்கப்பட்டிருந்த இந்த துஆவின் மீது எனது பார்வை பட்டது.

என் இறைவா! என் துஆவினை கேட்பாயாக! மேலும் உனது எதிரியையும் எனது எதிரியையும் தூள் தூளாக்குவாயாக! மேலும் துண்டு துண்டாக்கி விடுவாயாக! மேலும் நீ உனது வாக்குறுதியை நிறைவேற்றுவாயாக! மேலும் உன் அடியாருக்கு உதவி செய்வாயாக! எங்களுக்கு உன்னுடைய அந்த நாளை காட்டுவாயாக! மேலும் உனது வாளினை எங்களின் (உதவிக்காக) தயார் செய்வாயாக!

இந்த துஆவின் மீது பார்வை விழுந்தது. மேலும் இந்த இல்ஹாம் இறங்கியதிலிருந்தும் இது துஆ ஒப்புக் கொள்ளப்படக்கூடிய நேரமாகும் என்று தெரிய வந்தது என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ் அந்த அற்புதமான அடையாளத்தை இன்று நமக்கும் காட்டுவானாக! ஆமீன்.

**அடுத்து ஒரு முக்கிய துஆ - 21**

**சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அளீம். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின்** – அல்லாஹ் தூயவன் மற்றும் புகழுக்குரியவன்! அல்லாஹ் தூயவன் மற்றும் மகத்துவமிக்கவன். அல்லாஹ்வே! ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் மீதும் அன்னாரின் சந்ததியின் மீதும் அருள்புரிவாயாக!

இறுதியாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு துஆவிலிருந்து பயனடைந்தவாறு நான் இந்த துஆவை முன் வைக்கிறேன்.

என்னுடைய எஜமானனே! ஆற்றல்வாய்ந்த என்னுடைய அன்பிற்குரிய எனது எஜமானனே! என்னுடைய வழிகாட்டியே! வானம் மற்றும் பூமியைப் படைத்தவனே! மேலும் அதிலுள்ள அனைத்தின் மீதும் ஆற்றல் பெற்றவனே! உலகின் நேர்வழிக்காக இலட்சக்கணக்கான நபிமார்களை இறைதூதர்களை உலகிற்கு அனுப்பிய இறைவா! ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் போன்ற மகத்துவமிக்க நபியை உலகிற்கு அனுப்பிய வல்லமைமிக்க இறைவா! அன்னாரின் சமுதாயத்திற்கு வழிகாட்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை தொண்டராகிய மஸீஹ் போன்ற வழிகாட்டியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உம்மத்திலிருந்தே தோன்றச் செய்த அளவற்ற அருளாளனும், மேன்மேலும் கருணை காட்டக்கூடியவனும் ஆகிய இறைவா!

ஒளியை தோன்றச் செய்பவனே! இருளை அகற்றவனே! நீ உனது அன்பிற்குரிய நபி மற்றும் எங்களது எஜமானர் மற்றும் தலைவர் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் செய்த வாக்குறுதியின் பெயராலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் நீ செய்த வாக்குறுதியின் பெயராலும் உன் பக்கம் நாங்கள் பணிவுடன் சிரம் பணிந்த உன்னிடத்தில் உருக்கமாக முறையிடுகிறோம். நீ அந்த வாக்குறுதிகள் நிறைவேறுகின்ற மாபெரும் அடையாளத்தை எங்களுக்கு காட்டுவாயாக! நீ வாக்குறுதியை முழுமை செய்பவன் என்பதில் உள்ளத்தால் உண்மையாக நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். நீ நிச்சயமாக உனது வாக்குறுதியை முழுமை செய்வாய். ஆனால் எங்களின் இயலாமை மற்றும் குற்றம் குறைகளின் காரணமாக அந்த வாக்குறுதி நிறைவேறுகின்ற நேரம் பின்னால் தள்ளிப் போய்விடக்கூடாது என நாங்கள் அஞ்சுகிறோம். உன்னுடைய ரஹ்மானிய்யத் மற்றும் ரஹீமிய்யத்தைக் கொண்டு நாங்கள் உன்னிடம் வேண்டுகிறோம். எங்களது குறைகளை திரையிட்டு நாங்கள் அநீதியிழைத்திருந்தாலும் எவ்வாறு நீ இதற்கு முன்னர் அருள் செய்து வந்தாயோ! அதேபோன்று இப்போதும் எங்கள்மீது அருள் செய்து கொண்டே செல்வாயாக! நாங்கள் எங்கள் கடமைகளை எவ்வாறு நிறைவேற்றியிருக்க வேண்டுமோ அவ்வாறு நிறைவேற்றாத போதிலும் நீ எங்கள் மீது உனது அருள் மற்றும் கருணையின் மழையை பொழியச் செய்துள்ளாய். மேலும் எங்களுடைய ஈமானை உறுதிப்படுத்தி வந்தாய். நான் இன்று மீண்டும் பணிவுடன் வேண்டுகிறேன். அளவற்ற அருளாளனே! வாரி வழங்கும் இறைவனே! குறைகளை திரையிடும் இறைவனே! மிக்க மன்னிப்பவனும், மீண்டும் மீண்டும் கருணை செய்கின்ற இறைவா! நீ உன்னுடைய ரஹ்மானிய்யத் மற்றும் ரஹீமிய்யத் என்ற உனது பண்பின் கதவுகளை ஒருபோதும் எங்களுக்கு எதிராக அடைத்து விடாதே! எங்களுடைய குற்றம் பலவீனங்களை எப்போதும் திரையிடுவாயாக! எங்களை மன்னிப்பாயாக! கருணை காட்டுவாயாக! எவ்வாறு நீ இதுவரை நடந்து வந்துள்ளாயோ அந்த வழிமுறையை ஒருபோதும் நிறுத்தி விடாதே! நீ விதித்துள்ள எல்லா நன்மைகளையும் உன்னிடத்தில் நாங்கள் வேண்டுகிறோம். எல்லா நன்மைகளையும் நீ எங்களுக்கு வழங்குவாயாக!

என் அன்பிற்குரிய இறைவா! நான் உனது எல்லா பண்புகளின் பெயரால் உன்னிடத்தில் வேண்டுகிறேன். நீ எல்லா நன்மைகளையும் எங்களுக்கு தந்தருள்வாயாக! எங்கள் அன்பிற்குரிய இறைவா! நாங்கள் மிகவும் வேதனை மிக்க உள்ளத்துடன் உண்மையான துடிப்புடனும் உன் பக்கம் குனிந்தவாறு உன்னிடத்தில் வேண்டுகிறோம். என்னை அழையுங்கள்; நான் பதிலளிக்கிறேன் என்ற உனது வாக்குறுதிக்கேற்ப எங்களுடைய துஆக்களை செவிமடுப்பாயாக! மேலும் எங்களுக்கும் உன்னை வணங்குவதில் கவனமற்றவர்களாக இருப்பவர்களுக்கும் இடையில் மிக தொலைவினை ஏற்படுத்தி விடுவாயாக! எங்களை உனது நல்லடியார்களாக ஆக்கி விடுவாயாக! எங்களுடைய துஆக்களை கபூல் செய்து எங்களுடைய உள்ளத்தை உனது அன்பினால் நிரப்புவாயாக! உனக்காகவும் உன்னுடைய கட்டளைகளுக்காகவும் நாங்கள் எங்களை மாய்த்துக் கொள்ளும் அளவிற்கு எங்களின் செயல்களையும் கூற்றுகளையும் ஆக்குவாயாக! மேலும் எனது அன்பிற்குரிய தூதர் (ஸல்) அவர்களுக்காகவும், எங்களை அர்ப்பணித்துக் கொள்பவர்களாக ஆக்குவாயாக! மேலும் உன்னுடைய கட்டளைக்கேற்ப உனது தூதர் (ஸல்) அவர்களின் மீது ஸலவாத் ஓதுபவர்களாக எங்களை நீ ஆக்குவாயாக!

எந்த மஸீஹை நீ உனது வாக்குறுதிக்கேற்ப இக்காலத்தில் அனுப்பியுள்ளாயோ அவர்களுக்கு முழுமையாக கட்டுப்படக்கூடியவர்களாக எங்களை ஆக்குவாயாக! எங்கள் இறைவா! நாங்கள் மீண்டும் உன்னிடம் வேண்டுகிறோம்! நீ எங்களது உள்ளத்தை உனது அன்பினால் நிரப்புவாயாக! எங்களுடைய பலவீனங்களை அகற்றுவாயாக! எல்லா சோதனைகள், மற்றும் துன்பங்களிலிருந்து எங்களை பாதுகாப்பாயாக!

உண்மையான இஸ்லாம் அஹ்மதிய்யத்தை உலகம் ஏற்றுக் கொள்ளும் விதமாக உலக மக்களின் இதயத்தை திறப்பாயாக! முழு முஸ்லிம் சமுதாயத்தையும் ஒன்றுபட்ட சமுதாயமாக ஆக்குவாயாக! இன்று முஸ்லிம்கள எந்த ஃபித்னாக்களால் சூழப்பட்டுள்ளார்களே அவர்களை அந்த குழப்பங்களிலிருந்து காப்பாற்றுவாயாக! அவர்கள் உன்னுடைய மஸீஹ் மற்றும் மஹ்தியை கண்டு கொள்ளும் விதமாக அவர்களின் கண்களை நீ திறப்பாயாக! அல்லாஹ்வே! உலகம் காலத்தின் இமாமை கண்டு கொண்டு நெருப்பின் கிடங்கில் விழுவதிலிருந்து பாதுகாப்பாயாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 10.09.2010**

Translated by : **Maulavi ABDUR RAHMAN TAHIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**